**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 124 /2023**

| | | | |
|---|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 4 | **Caste** | |
| **Witness Name** | திரு. தினகரன் | **Calling** | தனியார் வேலை |
| **Father's Name** | பரமசிவம் | **Religion** | |
| **Village** | **சின்னப்பா நகர்** | **Age** | **30** |
| **Taluk** | **புதுக்கோட்டை** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2024.

**( எதிரி ஆஜரில்லை. அவர் தரப்பில் கு.வி.மு.ச மனு 317 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் சின்னப்பா நகரில் குடியிருந்து வந்து தனியார் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கணேசன் என்பவர் எனது நண்பனின் தந்தை ஆவார். தேதி மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் கணேசன் அவருடைய இரு சக்கர வாகனத்தில் வீட்டில் இருந்து புறப்பட்டுவெளியே சென்று கொண்டிருந்தார். எனது வீட்டின் அருகே உள்ள பாலத்தில் நான் அமர்ந்திருந்தேன். அப்போது கணேசன் பிரதான சாலையில் இருந்து இண்டிகேட்டர் போட்டு பிரிவு சாலைக்குள் வளைந்தார்.

2. கணேசனுக்கு எதிரே புல்லட் வண்டியில் 3 நபர்கள் அதிவேகமாக வந்து கணேசன் மீது மோதியதில் கணேசனுக்கு தலையின் பின்பகுதி, முதுகு ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது. கணேசனுக்கு இடது காதில் இருந்து இரத்தம் வந்தது. கணேசனின் வீட்டிற்கு தகவல் தெரிவித்தோம். கணேசனின் உறவினர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் . கணேசனை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். சிறிது நேரத்தில் கணேசன் இறந்துவிட்டதாக தகவல் வந்தது.

3. புல்லட் வண்டியை ஓட்டி வந்த நபரை பார்த்தால் அடையாளம் தெரியும். புல்லட் வண்டியின் பதிவெண் தற்போது எனக்கு நினைவில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

4. கடந்த 22.05.2023 அன்று எதிரி சீனிவாசன் என்பவர் TN 55 BS 4640 என்ற பதிவெண் கொண்ட புல்லட் இரு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து கணேசன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- சி.பாரதி
நீதித்துறை நடுவர் எண் -1 ,
புதுக்கோட்டை.